பெயர்:

# தொடர்புகளை உருவாக்குவோம்!

நூல் வகைகளின்படி தலைப்புகளை உருவாக்கி, கொடுக்கப்பட்டுள்ள வெற்று நூல் அட்டைகளை நிரப்பவும்.

**நான் வாசித்தக் கதை**

தலைப்பு:

நூலாசிரியர்:

கதையில் வரும் முக்கியக் கதாபாத்திரத்தோடு எவ்வாறு என்னைத் தொடர்புபடுத்திக் கொள்வது?




கதையில் எனக்குப் பிடித்த அம்சங்கள்.

கதையில் எனக்குப் பிடிக்காத அம்சங்கள்.

All Rights Reserved. © National Library Board Singapore, 2021

பெயர்:

# வாசித்தபின் செய்வோம்

நடவடிக்கை 1:

நீங்கள் தேர்வு செய்த புனைவு நூலை வாசித்தபின் கீழ்க்காணும் நடவடிக்கைகளை நிறைவு செய்யவும்.

| | | |
|---|---|---|
| கதையின் அமைப்பை விவரிக்கவும். கதை எங்கே, எந்தக் காலக் கட்டத்தில் நடைபெறுகிறது? | கதையில் நடைபெறும் முக்கியமான நிகழ்வை விவரிக்கவும். | கதையில் வரும் முக்கியக் கதாபாத்திரத்தை விவரிக்கவும். |

நடவடிக்கை 2:

கீழ்க்காணும் கட்டங்களில் இரண்டைத் தேர்வு செய்து நிறைவு செய்யவும்.

| | | |
|---|---|---|
| கதையில் வரும் ஒரு கதாபாத்திரத்திற்கு நீங்கள் ஒரு மின்னஞ்சல் எழுதவும். | நீங்கள் சந்திக்க விரும்பும் ஒரு கதாபாத்திரத்தைப் பற்றி விவரிக்கவும். அந்தக் கதாபாத்திரத்திடம் நீங்கள் கேட்க விரும்பும் 4 கேள்விகளைப் பட்டியலிடவும். | நீங்கள் வாசித்த நூலுக்கு ஒரு புது நூல் அட்டையை உருவாக்கவும். |
| இந்தக் கதைக்கு இரண்டாம் தொடர் பாகம் இருந்தால் அதில் என்னவெல்லாம் நடக்கும் என்பதைச் சுருக்கமாக எழுதவும். | கதையின் முடிவை மாற்றி எழுதவும். | இந்தக் கதையைப் பற்றி ஒரு நண்பரிடம் நான்கே வரிகளில் கூறவும். |







All Rights Reserved. © National Library Board Singapore, 2021

பெயர்:

# ‘பிங்கோ’ வாசிப்புச் சவால்

நீங்கள் செய்து முடித்த நடவடிக்கைகளைக் கொண்ட கட்டங்களுக்கு வண்ணம் தீட்டவும். குறைந்தபட்சம் ஒரு கிடைவரிசை அல்லது நெடுவரிசையை நிறைவு செய்யவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு புனைவு நூலை வாசித்து முடித்தேன் | நான் வாசித்த நூலைப் பற்றி பகிர்ந்து கொண்டேன் | நூலகத்திற்குச் சென்று நூல்களை இரவல் வாங்கினேன் | கற்பனைக் கதை ஒன்றை வாசித்தேன் | வரலாறு சார்ந்த ஒரு நூலைப் படித்தேன் |
| ஒரு சிறுவர் பாடலை வாசித்து மனப்பாடம் செய்தேன் | அறிவியல் சார்ந்த ஒரு நூலைப் படித்தேன் | நாட்டுப்புறக் கதை ஒன்றை வாசித்தேன் | தமிழ் எழுத்துக்களை வாசித்துப் பயிற்சி செய்தேன் | 30 நிமிடங்களுக்குச் சுயமாக வாசித்தேன் |
| மர்மக் கதை ஒன்றை வாசித்தேன் | நான் வாசித்த கதையில் வரும் ஒரு காட்சியை வரைந்தேன் | நான் இம்மாதம் வாசித்த நூல்களைப் பட்டியலிட்டேன் | சிங்கப்பூரில் வெளியிடப்பட்ட ஒரு நூலை வாசித்தேன் | அடிக்கடி பயன்படுத்தும் சொற்களைக் கொண்டு ஒரு சொற்களஞ்சியத்தைத் தயாரித்தேன் |
| இரவில் உறங்குவதற்கு முன்பு ஒரு நூலை வாசித்தேன் | என் நண்பரிடம் ஒரு கதைப் பகுதியை வாசித்துக் காட்டினேன் | நான் வாசித்தக் கதைக்கு ஒரு சுருக்கம் எழுதினேன் | நட்பைப் பற்றிய ஒரு கதையை வாசித்தேன் | என் பெற்றோரிடம் ஒரு கதைப் பகுதியை வாசித்துக் காட்டினேன் |
| அபுனைவு ஒன்றை வாசித்தேன் | விலங்குகளைப் பற்றிய ஒரு நூலை வாசித்தேன் | எதார்த்தக் கதை ஒன்றை வாசித்தேன் | பள்ளியின் இடைவேளை நேரத்தில் ஒரு நூலை வாசித்தேன் | 15 நிமிடங்களுக்குச் சுயமாக வாசித்தேன் |




All Rights Reserved. © National Library Board Singapore, 2021